பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 23 உ (9—10—67) திங்கள்: வெளியூர் : புரட்டாசி 24 உ (10—10—67) செவ்வாய் [இதழ் : 97

வெள்ளிப் பாத்திரத்தில் மட்டும் உணவருந்தும் எம்.எல்.ஏ. சாமியார் !

பஞ்சாப் சட்டமன்றத்தின் சுயேச்சை உறுப்பினரான ராமப் பிரகாச தாஸ், வெள்ளிப் பாத்திரங்களில்தான் உணவு அருந்துகிறார் !

மற்றொரு சுயேச்சை உறுப்பினரான பாட்டியாலா மன்னர் நடத்திய விருந்து ஒன்றுக்கு அவர் வந்திருந்தபோது, தான் ஓர் இந்து அமைப்பின் மகந்து ஆகிவிட்டதால், பழைய அரச பழக்கங்களைக் கடைப்பிடிப்பதாகக் கூறினர்.

அறிஞர் அண்ணா முயற்சி வெற்றி

குறுவை அறுவடை தடங்கலின்றி நடைபெறும்

முத்தரப்பு மாநாட்டில் கூலி நிர்ணய உடன்பாடு

மன்னார்குடி, அக். 8—

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் விருப்பப்படி, தஞ்சை மாவட்ட வேளாண்மைத் தொழிலாளர் கூலி உயர்வு பற்றிய முத்தரப்பு மாநாடு இன்று வெற்றிகரமாக முடிவுற்றது.

கீழத் தஞ்சை மாவட்ட நிலவுடைமையாளர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம், இங்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

ஐந்து மணி நேரத்துக்கு மேல் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சூடான கருத்துக்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. ஜி. இரங்கபாஷ்யம், கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி, குறுவை அறுவடை அமைதியாக நடைபெறவேண்டி முதலமைச்சர் விடுத்துள்ள வேண்டுகோளைப் படித்தார்.

இக்கூட்டத்தில் 250 பேருக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டார்கள்.

பின்வருமாறு உடன்பாடு காணப்பட்டது :—

1. கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டுவந்த கூலியே அடிப்படைக் கூலியாகக் கொள்ளப்படும். அறுக்கப்படும் ஒவ்வொரு கலம் நெல்லுக்கும் அரைப் படி வீதம் மேற்கொண்டு கூலி கொடுக்கப்படும்.
2. ஏற்கனவே அதிகப்படியாகக் கூலி கொடுக்கப்பட்டிருந்தால் அதை இனிக் குறைக்கக் கூடாது.
3. ஆறு படி வீதம் கூலி கொடுக்கப்படும் பகுதிகளில் இனிக் கூலி உயர்வு இல்லை.
4. உள்ளூர் ஆட்கள் போதாவிட்டால் அறுவடைக் காலங்களில் வெளியூர் ஆட்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.
5. இந்த உடன்பாட்டில் ஏதேனும் பிரச்சினை எழுந்தால் தாசில்தாரிடம் அதைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த ஒப்பந்தம், கீழத் தஞ்சைக்கு மட்டுமே பொருந்தும்.

இதுபற்றி மேற்கொண்டு பேச்சு நடத்த மாவட்ட ஆட்சித் தலைவரும், போலீசு அதிகாரியும் சென்னைக்குப் புறப்பட்டனர்.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்டவுடன், குழுமியிருந்தோர் அனைவரும் கையொலி ஆரவாரம் செய்து வரவேற்றார்கள்.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதன் விளைவாக, குறுவை அறுவடை எவ்விதப் பாதிப்புமின்றி தொடர்ந்து நடைபெறும்.

காங்கிரசல்லாத முதலமைச்சர்கள் மாநாடு--டிசம்பரில் நடத்த ஏற்பாடு

சென்னை, அக். 8—

காங்கிரசல்லாத முதலமைச்சர்களெல்லாம் டிசம்பர் திங்களில் கூடி, பொதுவான பிரச்சினைகளில் தாங்கள் கடைபிடித்தொழுக வேண்டிய முறைகளைப் பற்றி விவாதித்து முடிவு செய்வார்கள் என்று தெரிகிறது.

மத்தியப் பிரதேச சம்யுக்த விதாயக் தளத்தின் தலைவியான குவாலியர் அரசியார், நேற்று தமிழக முதலமைக்சர் அண்ணா அவர்களைச் சந்தித்தபின், செய்தியாளரிடம் இத்தகவலை அறிவித்தார்.

"காங்கிரசல்லாத அமைச்சரவைகளின் பிரதிநிதிகளை, குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை சந்திக்கச் செய்ய வேண்டும்" என்று அண்ணா கருத்தறிவித்ததாகத் தெரிகிறது.

காங்கிரசல்லாத முதலமைச்சர்களின் மாநாடு நடைபெற வேண்டும் என்று முன்பே தாம் கருத்தறிவித்திருப்பதாகவும் அண்ணா அவர்கள், குவாலியர் அரசிமிடம் தெரிவித்தார்.

இன்னும் இரண்டு திங்களில் அந்த மாநாடு நடைபெறும் என்று அரசியார் கூறினர்.

"மற்ற முதல்வர்களையும் கலந்து பேசியபின், மாநாட்டுக்கான நாளும் இடமும் அறிவிக்கப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கூடுதல் சர்க்கரை

கோவை, அக். 8—

"தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு உணவுப் பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு அதிகப்படியாக ஒரு கிலோ சர்க்கரை வழங்கப்படும்" என்று, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் கூறினர்.

உணவு, சிற்றுண்டி—மிட்டாய்க் கடைகளுக்கும் தீபாவளியை முன்னிட்டு அதிக சர்க்கரை வழங்க முடியுமா என்று அரசு ஆய்வு செய்துவருவதாகவும் அமைச்சர் கூறினர்.

நிலைமை அறிந்து வந்தார் இன்ஸ்பெக்டர்-ஜெனரல்

சென்னை, அக். 8—

தஞ்சை-பூந்தாழங்குடியில்நடந்த போலீசுத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணங்களை அறிந்து வருவதற்காகச் சென்றிருந்த காவல் துறைத் தலைமை அதிகாரி திரு. எப். வி. அருள், இன்று சென்னை திரும்பினர்.

உடன் முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்து, தற்போது அங்கு நிலவும் நிலைமைகளை விளக்கினர்.

நாகை வட்டத்தில் தடை உத்தரவு

நாகை, அக். 8—

கடந்த 5-ஆம் நாளன்று மன்னார்குடி வட்டத்தில் நடந்த போலீசுத் துப்பாக்கிச் சூடு நிகழ்ச்சியையொட்டி, காவல்துறைச் சட்டம் 30-(2) பிரிவின்கீழ், முன் அனுமதியின்றி பொதுக்கூட்டமோ, ஊர்வலமோ நடத்தக் கூடாது என்று நாகப்பட்டினம் உதவி போலீசு சூப்பிரிண்டெண்டு ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்த ஆணை, நாகப்பட்டினம் சப்-டிவிஷனில் இன்று முதல் 10 நாட்களுக்கு அமுலில் இருக்கும்.

இந்தி வெறியரின் 'இராணுவ அழைப்பு!'

ஒருமுறை தமிழகம் வந்துபோனால் புரியும்!

வாழ்க்கையே மந்தமாகி இருக்கும் இந்த நாட்களில், தம் பேச்சுக்களின் மூலம், யாராவது ஒரு 'தலைவர்' அந்த மந்த நிலையைப் போக்குவாரானால், நாம் நன்றி சொல்லியே தீர வேண்டும்.

சேத் கோவிந்த தாஸ் அப்படிப்பட்ட ஒரு 'தலைவர்'. அவருடைய இந்தி வெறி உலகப் புகழ் பெற்றது. அந்த வெறித்தனத்தை அவர் அவ்வப்போது வெளியிடும் முறைகள், அவருடைய குணதிசயங்களை ஏற்கனவே தெரிந்தவர்களுக்கு வேடிக்கையாகவே இருக்கிறது. அதிலும், 'தமிழக முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் உட்பட, சில தலைவர்களின் அச்சுறுத்தல்களிலிருந்து தமிழக மக்களை மீட்பதற்காக மத்திய அரசு தமிழகத்துக்கு இராணுவப் படையை அனுப்பிவிட வேண்டு'மென்றுரே—அது, எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது. அந்த அச்சுறுத்தல்கள், சேத்ஜியின் கூற்றுப்படி, இந்தித் திணிப்பைப் பற்றியவை!

தம் மரபுக்கேற்றபடி சேத்ஜி, காந்தியாரைத் துணைக்கு அழைத்திருக்கிறார். இதற்கு முன்னால் காஷ்மீரத்துள் படை நடத்திப் பகை ஒடுக்கிய நிகழ்ச்சியை முன்மாதிரியாகக் காட்டுகிறார்; காஷ்மீரத்து மக்களைக் காப்பாற்றுவதற்காக அங்கே படை அனுப்புவதைக் காந்தியாரேகூட ஒப்புக்கொண்டிருக்கிறார்' என்கிறார் அவர்!

காந்தியாரின் மனச்சான்றைக் காப்பாற்றும் பணியில் சேத்ஜி, தமமைத்தாமே அமர்த்திக்கொண்டு பேசும்போது, மேலே நாம் சொல்ல என்ன இருக்கிறது?

ஆனால் ஒன்று ;—தமிழகம் காஷ்மீரம் ஆகாது! அதிலும் தமிழக மக்கள், தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருந்தலைவரின் அச்சுறுத்தலிலிருந்தும்—அதிலும் சிறப்பாக முதலமைச்சர் அண்ணாதுரை அவர்களின் அச்சுறுத்தலிலிருந்தும் காப்பாற்றும்படி யாருக்கும் அழைப்பு விடவும் இல்லை.

அன்றாட நடைமுறை நிகழ்ச்சி விஷயத்தில் சேத் கோவிந்த தாஸ் அநியாயமாகப் பத்தாம் பசலியாக இருக்கிறார்! சென்ற பொதுத்தேர்தலில் அவருடைய கட்சி தோற்றதற்குக் காரணமே, தம் கட்சியில் உள்ள முட்டாள்களையும், வெறியர்களையும் தட்டிக் கேட்கவும், தடுத்து நிறுத்தவும் முனையாததுதான்!

தமிழக மக்களைப் படை அனுப்பிப் பணிய வைக்கலாம் என்று யோசனை சொல்வதன் மூலம், அவர், தம் கட்சிக்கு உதவி செய்தவர் ஆகமாட்டார்!

சேத்ஜி நினைப்பதற்கு மாறாக, முதலமைச்சர் அண்ணாதுரை அவர்களும்—அவருடைய அமைச்சரவைத் தோழர்களும், யாரையும் தூண்டிவிடவில்லை; 'இந்தி என்றைக்கும் கூடாது' என்று திட்டவட்டமாகத் தீர்மானித்துவிட்ட மக்களின் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து அவர்கள் அமைதியைக் கடைபிடிக்கும்படியே அறிவுறுத்திவருவதன் விளைவாகத்தான், இதுவரை இந்தி எதிர்ப்பு சட்டபூர்வமாகவே இருந்துவருகிறது.

நிலைமையை நேரே கண்டறிய சேத்கோவிந்ததாஸ் ஒருமுறை தமிழகம் வருவது நல்லது; அப்போதுதான், தம் தலைவர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ளத் தமிழர்கள், இராணுவத்தின் துணையைத் தேடவில்லை; மாறாக, பொதுமக்களின் கண்டனத்திலிருந்தும், ஆத்திரத்திலிருந்தும் காப்பாற்றப்பட, இவருக்குத்தான் முதலமைச்சர் போலீசுப் பாதுகாப்புத் தரவேண்டியிருக்கும் என்பதை அறிந்துகொள்வார்!

—'சைத்தான் வேதம் ஓதுகிறது' என்ற தலைப்பில் 7—10—67 'மெயில்' இதழில் எழுதப்பட்ட தலையங்கம்.

தேர்தல் பிரசாரம்

அண்ணா துவக்கிவைக்கிறார்

சென்னை, அக். 9—

தென் சென்னைத் தொகுதியில் இன்று அறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கிவைக்கிறார்.

தேனாம்பேட்டை ஏரிக்கரை மைதானத்தில் தோழர் என். எஸ். தேவராசன் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில், முதலமைச்சர் அண்ணா அவர்கள், முரசொலி மாறனை ஆதரித்துத் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கிவைப்பதுடன், 'மாலை மணி' நாளிதழையும் வெளியிடுகிறார்.

மற்றும், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., சி. பா. ஆதித்தனார், கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., மேயர் இரா. சம்பந்தம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., முரசொலி மாறன், மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

இதுவரை தரிசாகக் கிடக்கும் நிலங்களில் சாகுபடி செய்து அனுபவிக்க ஐந்து ஆண்டுக்காலம் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வந்தது; இனி பத்து ஆண்டுக்காலம் வரை சாகுபடி செய்யத் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 23 (9—10—67) திங்கள்

இந்தி வெறி தரும் பாடம்

இந்தி மொழித் திணிப்பை ஆதரித்து மாநாடு ஒன்று, அண்மையில் ஆந்திர மாநிலத்தின் தலைநகரான ஐதராபாத்தில் நடைபெற்றிருக்கிறது. அம்மாநாட்டில், இந்தி வெறியின் நடமாடும் மனித உருவமாக இருந்துவருகின்ற நாடாளுமன்ற உறுப்பினரான சேத் கோவிந்த தாஸ் அவர்கள் கலந்துகொண்டிருக்கின்றார்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு ஏற்படுவதாக இருந்திட்டாலும்—உள்நாட்டில் குழப்பமும் கொந்தளிப்பும் உருவாவதாக இருந்திட்டாலும்—இந்தி பேசாத மக்களின் எதிர்கால நலன் பாழ்பட்டுப் போவதாக இருந்திட்டாலும், அதைப் பற்றி எல்லாம் சேத் கோவிந்த தாஸ் அவர்களுக்குக் கடுகளவு கவலையும் கிடையாது. அவருக்கிருக்கின்ற கவலையெல்லாம் ஒன்றே ஒன்றுதான்; அதாவது, 'எந்த விலையைக் கொடுத்தேனும் மற்ற மொழிகள் அனைத்தையும் தரைமட்டமாக்கி—ஆங்கில மொழிக்குப் பதிலாக இந்தி மொழியை அரியணையில் ஏற்றிவைத்து—அம்மொழிக்கு முடிசூட்டு விழா நடத்திவிட வேண்டும்' என்பதுதான்! அந்த அளவுக்கு, சேத் கோவிந்த தாஸ் அவர்கள் தலையை, இந்தி வெறி அடிமையாக்கிக் கொண்டிருக்கிறது!

கோவிந்த தாஸ் போன்றவர்களின் இந்தி வெறியின் விளைவாக, இந்தி பேசாத தென்னக மக்களின் மொழி உட்பட மற்ற நலன்களுக்கு ஏற்படக்கூடிய சீரழிவைத் தடுத்து நிறுத்த, காலஞ்சென்ற தலைமை அமைச்சர்களான பண்டித நேருவும், லால்பகதூர் சாஸ்திரியும் இந்தி பேசாத மக்களுக்கு வாக்குறுதி தந்தனர்; அவ்வாக்குறுதியைப் பின்பற்றி, அதை உள்ளடக்கமாகக்கொண்ட சட்டத்தை இயற்றப்போவதாக இன்றையத் தலைமை அமைச்சரும் நம்பிக்கையூட்டிக்கொண்டே இருக்கின்றார்.

இந்த நிலையில், 'இந்தி மொழி விவகாரத்தில், இந்தி பேசாத பகுதி மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப் பண்டித நேருவுக்கும் லால்பகதூர் சாஸ்திரிக்கும் ஏது அதிகாரம்?' என்ற கேள்வியை, இந்தி வெறியரான சேத் கோவிந்த தாஸ் அவர்கள், மேற்படி மாநாட்டில் கேட்டிருக்கின்றார். தம்முடைய இவ்விதண்டாவாதக் கூற்றுக்கு, அரசியல் சட்டத்தையும் ஆதாரமாகக் காட்டியுள்ளார் அந்த மொழி வெறியர்!

இந்தி மொழி திணிக்கப்படுவதால், தங்களுடைய மொழி உட்பட மற்ற நலன்களுக்கு ஊறு நேர்ந்துவிடும் என இந்தி பேசாத பகுதி மக்கள் கொண்டுள்ள அச்சத்திலுள்ள நியாயத்தைப் புரிந்துகொண்டுதான், காலஞ்சென்ற பண்டித நேருவும், லால்பகதூர் சாஸ்திரி அவர்களும், 'இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்றவரை ஆங்கில மொழியும் தொடர்ந்து இருந்துவரும்' என்ற வாக்குறுதியைத் தந்தனர். அவர்கள் இருவரும் தந்த வாக்குறுதியில் தாங்கள் நம்பிக்கை வைத்திருந்தபோதிலும், 'அவ்வாக்குறுதிக்குச் சட்ட ஏற்பாடு வேண்டும்' என்ற கோரிக்கையை, இந்தி பேசாத பகுதி மக்கள் வற்புறுத்தலாயினர். இதே நேரத்தில், 'அவ்வாக்குறுதியை உள்ளடக்கமாகக் கொண்ட சட்டமியற்றினால் மட்டும் போதாது; அவ்வாக்குறுதியை ஏற்று, அரசியல் சட்டத்திலேயே திருத்தம் செய்துவிட வேண்டும்' என்றும் இந்தி பேசாத பகுதி மக்கள் முழுமூச்சாக வற்புறுத்தி வருகின்றனர்.

"காலஞ்சென்ற நேருவும், லால்பகதூரும் தந்துள்ள வாக்குறுதியைச் செயல்படுத்தச் சாதாரண சட்டமியற்றினாலே போதுமானது; அதற்காக, அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டியதில்லை" என, இன்றையத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியாரும், ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்ற மற்றவர்களும் கூறிவருகின்றனர். இந்திய அரசின் இந்த முடிவை, தமிழகத்திலிருக்கின்ற பெருவாரியான மக்கள் ஏற்க மறுக்கின்றனர்; 'அரசியல் சட்டத்திலேயே அதற்கான திருத்தம் செய்தே ஆகவேண்டும்' எனத் திட்டவட்டமாகத் தெரிவித்து வருகின்றனர்.

"நேருவின் வாக்குறுதியைச் செயல்படுத்துவதில் நல்லெண்ணமும், அக்கறையும் இன்றைய இந்திய அரசாங்கத்துக்கு இருக்கிறது என்பது உண்மையானால், அதற்குரிய விதியை அரசியல் சட்டத்திலேயே இணைத்துவிட வேண்டும்" என, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறி வருகின்றார். அன்பர் ஆச்சாரியார் அவர்களைப் போன்றவர்கள், முன்பிருந்தே இக்கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றனர்.

'அரசியல் சட்டத்தில் திருத்தம் வேண்டும்' என்ற அறிஞர் அண்ணாவின் கோரிக்கை, எத்தகைய இன்றியமையாதது என்பதை, 'வாக்குறுதியைச் செயல்படுத்த அரசியல் சட்டத்தைத் திருத்தத் தேவையில்லை; தனிச் சட்டம் இயற்றினாலே போதுமானதாகும்' என வாதிட்டு வருகின்றவர் அனைவரும் தெளிவாகத் தெரிந்துகொள்ளக்கூடிய அரிய வாய்ப்பு இப்பொழுது கிடைத்திருக்கிறது. அந்த அரிய வாய்ப்பை, இந்தி வெறியரான சேத் கோவிந்த தாஸ் அவர்கள், இப்பொழுது உருவாக்கியுள்ளார்.

"தலைமை அமைச்சர் இந்திரா காந்தியார், அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் கொண்டுவரப் போவதாகக் கூறுகின்ற ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவை, 'ஆதரிக்கவேண்டும்' என்று காங்கிரசுக் கட்சி கட்டளை பிறப்பித்தாலும், காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோர் திருத்தத்தை எதிர்த்து வாக்களிப்பார்கள்" என்று சேத் கோவிந்த தாஸ் அவர்கள் அச்சுறுத்தி இருக்கின்றார்!

இந்தி வெறியரின் இந்த அச்சுறுத்தலை அலட்சியம் செய்துவிட்டு—தாம் கூறிவருவதேபோல்—அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில், குறிப்பிட்ட மொழித் திருத்த மசோதா கொண்டுவரப்படுமா கொண்டுவரப்படமாட்டாதா என்பதல்ல பிரச்சினை; சேத் கோவிந்த தாஸ் அவர்களின் அச்சுறுத்தலிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, 'மொழிப் பிரச்சினைக்கு அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும்' என்ற முதலமைச்சர் அண்ணா அவர்களின் கோரிக்கை, நூற்றுக்கு நூறு நியாயமானது—இன்றியமையாதது—என்பதைத்தான்!

ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுவிட்டாலும், 'மொழிப் பற்றிய அரசியல் சட்ட ஏற்பாட்டிற்கு, இயற்றப்பட்டிருக்கின்ற மொழிச் சட்டம் முரணானது' என, இந்தி வெறி தலைக்கேறிய கோவிந்த தாசர்கள், வழக்குத் தொடரத்தான் தொடருவர்! அவ்வழக்கில், இந்தி வெறியர்கள் வெற்றி பெறுவர் என்பதும் உறுதியிலும் உறுதியாகும்!

எனவே, மொழிச் சிக்கலுக்கு உண்மையான பரிகாரம், அரசியல் சட்டத்தில் அதற்குரிய ஏற்பாட்டினைச் செய்வதுதான். அரசியல் சட்டத்தில் அதற்கான ஏற்பாட்டைச் செய்கின்றவரையில், இந்தித் திணிப்பின் வேகமும் விரைவும் இருக்கத்தான் இருக்கும்.

இந்திக் திணிப்பு இருக்கின்றவரை, இந்தி பேசாத பகுதி மக்களிடம் மூண்டுள்ள அச்சமும் அவநம்பிக்கையும் நீடித்து இருந்துவரத்தான் வரும். இதன் விளைவாக, இந்திய ஒருமைப்பாட்டு உணர்வுக்கு ஊறு நேரிடும்பட்சத்தில், அதில் வியப்பு எதுவுமில்லை!

—கா. க.

'சிக்கல்களைக் களைவது அவசியம்'

கூட்டுறவு இயக்கங்கள் ஆற்ற வேண்டிய பணி பற்றி அண்ணா

சேங்கற்பட்டு, அக். 9—

"'கூட்டுறவு இயக்கம் சரியான முறையில் செயல்படவில்லை' என்ற எண்ணம் மக்கள் மனத்தில் இருக்கிறது; 'அப்படி இல்லை' என்று மட்டும் கூறிவிட இயலாது; அந்தக் குறையை நீக்கிக் கூட்டுறவு இயக்கங்கள் செயல்பட்டால், ஒவ்வொரு குடும்பமும் இதில் பங்கு பெறுவதற்கான ஆர்வம் ஏற்படும்.

"கூட்டுறவு இயக்கங்கள், பின்னல்கள்போல அமைந்திருக்கின்றன; அந்தப் பின்னல்களில் சில சிக்கல்கள் இருக்கின்றன; அவைகளை நாம் களைய வேண்டும்; அறிவாற்றல் உள்ளவர்கள் தங்கள் அனுபவத்தைக் கூட்டுறவு இயக்கத்துக்குத் தந்துதவி இத்துறையில் ஒத்துழைப்புத் தர முன்வரவேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"கூட்டுறவு இயக்கம் தேவை என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

நடைமுறையில் எல்லா மக்களுக்கும் பயன்தருவதாகக் கூட்டுறவு இயக்கம் அமைந்தால் எல்லோரும் வரவேற்பார்கள்.

நடைமுறை இன்றையத்தினம், மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கூட்டு+உறவு என்ற இரண்டு சொல் சேர்ந்து, 'கூட்டுறவு' என்று பெயர் பெற்றுள்ளது. 'கூட்டு' மட்டும் என்றால், இலாபத்துக்குத்தான். 'உறவு' என்று இருப்பதால், அது, இலாபம் அற்று இருக்கிற உறவாகத்தான் இருக்கவேண்டும்.

நடைமுறையைப் பொறுத்துத்தான் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு அமையும்.

'கூட்டுறவு இயக்கம் வேண்டாம்' என்று யாரும் சொல்லமாட்டார்கள்; ஆனால், நடைமுறையில் உள்ள சிக்கலை நாம் மறந்துவிடுவதற்கு இல்லை!

ஒருவரே தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தலைவரார்க இருக்கக்கூடாது என்று முன்பு பேசப்பட்டு, பின்னர் அப்போதைய அரசியல் சூழ்நிலையில் அது கைவிடப்பட்டது!

எதற்கும், முதல் அணி—இரண்டாவது அணி — மூன்றாவது அணி என்று படை வரிசை இருக்கவேண்டும்; முதல் அணி பதவியிலிருந்து, பின், இரண்டாவது அணிக்கு வழி கொடுக்க வேண்டும்; அப்படி வழி கிடைத்தால்தான், அனுபவமும் திறமையும் என்றும் கிடைக்கும்—ஓர் இயக்கம் நீடித்து நடக்கவும் முடியும். இதில், சட்டச் சிக்கல் இருக்கிறதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது!

கூட்டுறவுத் துறையில் தலைவராக இருப்பவர்கள், 'எனக்குப் போக விருப்பம்தான்; ஆனால், பின்னால் வருபவர்கள் எப்படி நடத்துவார்களோ என்று பயமாக இருக்கிறது' என்று சொல்லக் கூடாது.

தலைவராக ஒருவர் இருக்கும்போது—அவருக்குப் பிறகு வர வேண்டியவர்கள் அவர்கள் காலத்திலேயே — அதற்குரிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; 'யாரும் வரலாம்' என்ற அளவுக்குப் பயிற்சி பெற்றுவிட வேண்டும்.

'கூட்டுறவு இயக்கத்திற்கு ஒருவரே தலைவராக இருக்க வேண்டும் — டைரக்டராக இருக்க வேண்டும்' என்பதை மாற்றி, அவர்கள், தங்கள் அனுபவத்தை மற்றவர்களுக்குத் தர வேண்டும்.

கூட்டுறவு இயக்கங்களுக்கும்—மக்களுக்கும், கூட்டுறவு இயக்கங்களுக்கும்—அரசுக்கும் நல்ல உறவு இருக்கவேண்டும்.

எல்லாத் துறைகளுக்கும் நாம், கூட்டுறவுத் துறையைப் பயன்படுத்தலாம்.

ஜப்பான் நாட்டில், உணவு உற்பத்தித் துறையில், முழு அளவுக்குக் கூட்டுறவு முறை பயன்படுத்தப்படுகிறது; அங்கு, விவசாயம் முழுவதுமே இத்தகைய கூட்டுறவு இயக்கங்கள் மூலம்தான் நடைபெறுகின்றன.

ஒரு விவசாயி நிலம் வாங்கவேண்டும் என்றாலும்—நிலத்தில் விளைகிற தானியத்தை விற்பதாக இருந்தாலும் அவர்கள், கூட்டுறவு இயக்கத்தையே நாடுகிறார்கள். அதனால்தான் அந்த நாட்டில் உள்ளவர்கள் இரண்டு மூன்று ஏக்கர் நிலம் உள்ளவர்களாக இருந்தாலும் வளமாக வாழ்கிறார்கள்!

நான் ஜப்பான் நாட்டுக்குப் போயிருந்தபோது அங்குள்ள ஒரு கிராமத்தில் மூன்று நாட்கள் தங்கியிருந்தேன். 5 ஏக்கர் நிலம் உள்ள ஒரு விவசாயி வீட்டில் மூன்று மோட்டார்கள் வைத்திருந்தார்கள். அவர்கள் நிலத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

சிறிய டிராக்டர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்; 'என்ன விலை' என்று கேட்டவுடன் ஒரு புத்தகத்தைத் திறந்து காட்டி, 'ஒரு பகுதியை முன்பணமாகக் கொடுத்துவிட்டு, மீதியை மாதா மாதம் செலுத்துகிறோம்' என்று சொல்லுகிறார்கள். கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டு இருப்பதால் இவ்வளவும் அவர்களுக்குக் கிடைக்கிறது. இதனை நாம் உணரவேண்டும்."

'கூட்டுறவு இயக்கம்--மக்களுக்குப் பணியாற்றும் கருவியாக மாறவேண்டும்'

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் கருத்துரை

செங்கற்பட்டு, அக். 9—

"போர்க் காலத்தில் உணவு நெருக்கடி இருந்த நேரத்தில்—சிலர் வர்த்தகச் சூதாட்டத்தில் ஈடுபட்ட நேரத்தில்—கள்ளச் சந்தையில் கொள்ளை இலாபம் அடித்த நேரத்தில் கூட்டுறவு இயக்கம் மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்றி வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது.

"கூட்டுறவு இயக்கம், மக்களுக்கு மகோன்னத கருவியாகப் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது; சமூகத்தில் உள்ள சாதாரண மக்கள் எல்லாம் நன்மை பெறுவதற்கு இது பயன்படுகிறது"

என்று உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள், செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்தின் வெள்ளி விழா—புதிய அலுவலகக் கட்டிடத் திறப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தக் கூட்டுறவுச் சங்கம், சமுதாயத்திற்குப் பணியாற்றும் ஒப்பற்ற கருவியாக மாறுவதற்கு முயற்சியெடுக்க வேண்டும்.

'கூட்டுறவு இயக்கம் தோல்வியடைந்துவிட்டது' என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியாது.

முதலமைச்சர் அண்ணா தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு கூட்டுறவுத் துறையில் புரட்சிகரமான மாறுதல் செய்ய வேண்டியிருக்கிறது.

வெறும் கடன் வாங்குவதற்காக மட்டும் பயன்பட்டு வந்த கூட்டுறவுச் சங்கங்கள், இன்றையத் தினம், சர்க்கரை ஆலை—எண்ணெய் ஆலை போன்றவற்றை நடத்துகின்றன.

பொருளாதாரத் துறையில் பங்கு எடுத்துக்கொள்ள வாய்ப்புள்ள சங்கங்கள் இதுபோன்றவற்றில் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதன் நிர்வாகத் திறமை இனி முழுமையாகத் தொடங்கவேண்டும் என்று நாட்டு மக்கள் விரும்புகிறார்கள்.

சமுதாயத்தில் சிலர் மேல் மட்டத்தில் இருக்கிறார்கள்; சிலர் கீழ் மட்டத்தில் இருக்கிறார்கள்; இதை நேர்ப்படுத்த—சமதர்ம சமுதாயத்தை அமைக்க—நாம் எல்லாம் உறுதிமொழி எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதற்கான ஒரு கருவியாக இந்தக் கூட்டுறவு இயக்கம் பயன்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை நம்பிக்கொண்டு இருக்காமல் இந்தச் சங்கம், நாட்டு மக்களுக்கு நல்லதைச் செய்ய முன்வர வேண்டும்.

ஒரே மாதிரியான சங்கங்கள் பல இருப்பதைத் தடுத்து ஒன்றின் கீழ் ஒன்றாகப் பணியாற்ற வேண்டும்.

யாரோ சிலருக்கு 'ஜமீன்' மாதிரி இந்தச் சங்கம் உபயோகமாகிறது என்றில்லாமல், 'சனநாயக மணம் கமழ்கிறது' என்று போற்றத்தக்க அளவுக்கு உறுப்

(3-ம் பக்கம் பார்க்க)

இலஞ்ச ஊழல்

புரிந்தோர்மீது நடவடிக்கை

இலஞ்ச ஊழல்களில் ஈடுபட்ட அரசு ஊழியர்களுக்கு, ஜுன் 30-ந் தேதியுடன் முடிந்த காலாண்டில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் வருமாறு :—

ஒரு போலீசு இன்ஸ்பெக்டர், ஒரு போலீசு சப்-இன்ஸ்பெக்டர், இரண்டு தலைமைக் கான்ஸ்டபிள்கள், ரிசர்வ் போலீசைச் சேர்ந்த இரண்டு நாய்க்குகள், ரிசர்வ் போலீசைச் சேர்ந்த மூன்று லான்ஸ் நாய்க்குகள் ஆகியோர் வேலையிலிருந்து தள்ளப்பட்டனர்.

இரண்டு கான்ஸ்டபிள்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

ஒரு போலீசு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு தலைமைக் கான்ஸ்டபிள், ஒரு கான்ஸ்டபிள், போலீசுத் துறையைச் சேர்ந்த ஒரு ரிசர்வ் கான்ஸ்டபிள், ஒரு மருத்துவ அதிகாரி, ஒரு தாசில்தார் ஆகியோர் வேலையிலிருந்து கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டனர்.

ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு வேளாண்மை வருமான வரி அதிகாரி ஆகியோர் ஓராண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்.

ஒரு சப்-இன்ஸ்பெக்டர் சம்பளம் இரண்டு கட்டங்கள் குறைக்கப்பட்டது.

ஒரு உதவி வர்த்தக வரி அதிகாரி, ஒரு பெண் நர்சிங் ஆர்டர்லி, ஒரு பெண் சுகாதார ஊழியர், ஒரு பேறுகால உதவியாளர் ஆகியோரின் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது.

ஒரு வனப் பணியாளர் தற்காலிக வேலைநீக்கம் குறிப்பிட்ட தண்டனையாகக் கருதப்பட்டது.

வட்டிக் கடைகள் மறைகின்றன!

வீட்டில் நிறைய பழைய அரிய பொருட்களை வைத்துள்ள—ஆனால், பணத்துக்கு அவதிப்படுகிற குடும்பங்கள், ஒருகாலத்தில் அடகுக் கடைக்காரர்களிடம் அப்பொருட்களை வைத்துப் பணம் பெறுவது இயல்பாக இருந்தது; இப்போது ஜப்பானில் அடகுக் கடைகளைக் காண்பது அரிதாகிவிட்டது!

கடந்த 7 ஆண்டுகளில், பாதிக்கும் மேற்பட்ட அடகுக் கடைகள் மறைந்துவிட்டன!

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர், தொலைபேசிக் கம்பங்களில் தொங்கிய விளம்பரப் பலகைகளில் 60 சதவிகிதம், அடகுக் கடைகளின் விளம்பரப் பலகைகளாகவே இருந்தன; இன்று அவற்றை அரிதாகவே காண முடிகிறது.

அடகு வியாபாரம் படுத்ததற்கு, வாழ்க்கை முறைகள் பெரிதும் மாறியது ஒரு முக்கியக் காரணமாகும்.

அத்துடன், பெண்கள் உரிமை பெற்றவர்களாகிவிட்டதால் கணவன்மார்கள் மனைவியரின் ஆடை அணிகலன்களைப் பிடுங்கிப்போய் அடகு வைப்பதும் சாத்தியமற்றதாகிவிட்டது.

தவிர, தனி நபர்களுக்குக் கடன் வழங்க பாங்கிகளும், கடன் வழங்கு அமைப்புகளும் தோன்றிவிட்டன. பல சமயங்களில் வேலையில் உள்ள ஒருவர் தனது கம்பெனி வழங்கியுள்ள வேலை அடையாள அட்டையைக் காட்டினாலே போதும்—கடன் கிடைத்துவிடும்.

எனினும், அடகுக் கடைக்காரர்கள் அடியோடு மறைந்துவிடுவர் என்று யாரும் கருதவில்லை.

பள்ளிப் புத்தகங்களில் கள்ளத்தனம்!

பாட்டியாலா, அக். 9—

பஞ்சாபில் பாடப் புத்தகங்களுக்குப் பற்றுக்குறையிருப்பது கறுப்புச் சந்தைக்காரர்களுக்குக் கொண்டாட்டமாகப் போய்விட்டது!

"இந்தி, பஞ்சாபி மொழிப் பலபாடங்களை எவரோ சிலர் அள்ளிக்கொண்டு போய்விட்டதால், அவற்றுக்குக் கடும் பஞ்சம் வந்துவிட்டது" என்று இங்குள்ள புத்தக விற்பனையாளர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

உணவு உற்பத்தியில்......

தன்னிறைவை நோக்கி விரைகிறது மலேசியா!

அரிசியில் தன்னிறைவு காண முயன்று நிற்கும் ஆசிய நாடுகளில் மலேசியாவும் ஒன்றாகும். அது, 'மாபெரும் முன்னேற்றம்' கண்டு வருவதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

"மலேசியா தனது மக்களுக்குப் போதிய அரிசியைப் பெறும் முயற்சியில் மாபெரும் முன்னேற்றம் கண்டுவருகிறது; அரசு உள்நாட்டுப் பயனுக்கென விளைச்சலைப் பெருக்கும் ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தை நாட்டில் உருவாக்கிவிட்டது" எனக் கூறப்பட்டிருக்கிறது.

ஆண்டில் ஆளுக்கு 260 இராத்தல் அரிசி தேவைப்படுவதால், அத்தானியம், மலேசியாவின் மாபெரும் தேவையாகிவிட்டது.

"நல்வாய்ப்பாக அந்நாடு, மாபெரும் சாதனையைச் செய்யக்கூடிய வளங்களைப் பெற்றிருக்கிறது" எனக் கூறப்பட்டிருக்கிறது.

மலேசியா பத்தாண்டுகளுக்கு முன்னர் தனது அரிசித் தேவையில் பாதியை இறக்குமதி செய்து வந்தது; சென்ற ஆண்டு அது, 3[illegible] சதவிகிதமாகக் குறைந்தது.

"[illegible]காடுகளை அரிசி விளைவிக்கும் நில[illegible]ாக மாற்றுவது மெதுவானதும்[illegible] செலவாகக் கூடியதுமான வேலை[illegible]யாகும்" எனக் கூறப்பட்டிருக்[illegible]றது.

ஒவ்[illegible]ரு மகசூலிலும் அதிக விளைச்சல்[illegible]—பழைய நிலங்களில் இருபோக சாகுபடி ஆகியவற்றினாலேயே விளைச்சல் பெரிதும் அதிகரித்துள்ளது. இருபோக சாகுபடியின்கீழ் இவ்வாண்டு 1,04,000 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டிருக்கிறது.

ஆனால், 1970 வாக்கில் 4,80,000 ஏக்கரில் இருபோக சாகுபடி செய்வதும், பயிர் நிலங்களை விரிவுபடுத்துவதும் அரசின் குறிக்கோளாயிருக்கின்றன.

இக்குறிக்கோளில் சுமார் கால்வாசி மெல்லமெல்ல அடைபட்டுவிட்டது; இன்னும் முக்கால்வாசியை மிக விரைவில் அடையத் திட்டமிட்டிருக்கின்றனர். அக்குறிக்கோள் திட்டமிட்ட காலத்தைவிட இரு மடங்கு அதிகமான காலத்தில் அடையப்பட்டாலும், அது நெல் விளைச்சல் முன்னேற்றத்தில் நவீன சாதனையாக இருக்கும்.

இந்திய மொழிகளில் குழந்தைகளுக்கான புத்தகங்கள்

பம்பாய், அக். 9—

'அது சாத்தியமில்லை' என்று யாரேனும் ஒருவர் சொல்வதற்கு முன்னர், இங்குள்ள இலாப நோக்கற்ற ஓர் அமைப்பு, ஆங்கிலத்திலும் மற்றும் 9 இந்திய மொழிகளிலும் குழந்தைகளுக்கான புத்தகங்களை ஒரே சமயத்தில் வெளியிட்டு, 'அது சாத்தியமே' என்று காட்டியுள்ளது.

இதுவரை போடப்பட்ட திட்டப்படி, மொத்தம் 48 பொருள்களைப் பற்றிய புத்தகங்கள் வெளியிடப்படும்; அவை தயாரானவுடன் அவ்வப்போது பிரசுரிக்கப்படும்.

"இப்பிரசுரத் தொடரின் நோக்கம், விஞ்ஞான நுட்பங்களைப் பரப்புவது மட்[illegible]மன்றி, மக்கள்—அவர்களுடைய[illegible] வாழ்விடங்கள்—கலாசாரங்கள் ஆகியவற்றைப் பற்றிய அறிவையும், பரிவு உணர்வையும் வளர்ப்பதாகும்" என்று பிரசுரகர்த்தர்கள் கூறினர்.

இவ்வகையிலான புத்தகங்கள், குழந்தைகளுடைய சொல் ஞானம்—விஞ்ஞானம்—தொழில்நுட்பம்—உலகம் ஆகியவை பற்றிய அறிவையும் வளர்க்கும் என்று கருதப்படுகிறது.

சொந்தமாக எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள், மொழி பெயர்ப்புகள் ஆகியவற்றை முதலில் அத்துறையிலான நிபுணர்களும், பிறகு மொழி நிபுணர்களும் ஆராய்ந்த பிறகே புத்தகங்களாக வெளியிடப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

ஊராட்சிமன்ற இடைத் தேர்தல்கள்

வங்கனூர்

திருத்தணி வட்டம் வங்கனூர் ஊராட்சிமன்றத்துக்கு 2-வது வார்டில் நடந்த இடைத் தேர்தலில், தி. மு. க. செயலாளர் கே. நரசிம்மன் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வெள்ளலூர்

வெள்ளலூர் பேரூராட்சிமன்ற 12-வது வார்டுக்கு 21—9—67-ல் இடைத் தேர்தல் நடைபெற்றது. கழக உறுப்பினர் நடராசன் போட்டியிட்டார்; அவரை எதிர்த்துக் காங்கிரசுக் கட்சி சார்பில் தோழர் மருதாசலமும், சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி சார்பில் தோழர் வி. என். வெள்ளிங்கிரித் தேவரும் போட்டியிட்டனர். தோழர் நடராசன் 200 ஓட்டுக்கள் பெற்று வெற்றியடைந்தார். தோழர் மருதாசலம் 128 ஓட்டுக்களும் வெள்ளிங்கிரித் தேவர் 115 ஓட்டுக்களும் பெற்றுத் தோல்வியடைந்துள்ளனர்.

மறகுளம்

கமுதி ஊராட்சி ஒன்றிப்பைச் சேர்ந்த மறகுளம் ஊராட்சி 1-வது வார்டிற்கு நடந்த இடைத் தேர்தலில், பார்வர்ட் பிளாக் உறுப்பினர் கே. எல். எம். இராமமூர்த்தி போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கமுதி பேரூராட்சி உறுப்பினராக இருந்து பதவி துறந்தவர் ஆவார்.

புல்லரம்பாக்கம்

திருவள்ளூர் வட்டம் புல்லரம்பாக்கத்தில் 28—9—67 அன்று நடைபெற்ற ஊராட்சிமன்ற 1-வது வார்டு இடைத் தேர்தலில், தி. மு. க. செயலாளர் எஸ். சொக்கலிங்கம் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கமுதி

கமுதி பேரூராட்சி இடைத் தேர்தல் 12—9—67-ல் நடந்தது. அதில் முஸ்லிம் லீக் ஆதரவு பெற்ற ஆசிரியர் டி. ஞானமாணிக்கமும், கமுதி முன்னாள் நகர் காங்கிரசுத் தலைவர் என். எஸ். எம். ஜெய்னுல்லாப்தீனும் போட்டியிட்டனர்.

திரு. ஞானமாணிக்கம் 314 வாக்குகளும், என். எஸ். எம். ஜெய்னுல்லாப்தீன் 122 வாக்குகளும் பெற்றனர்.

வெற்றி பெற்ற ஞானமாணிக்கம் சுயேச்சையாகப் போட்டியிட்டார்.

புரகரநத்தம்பண்ணை

30—9—67 அன்று ஆலங்குடி வட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிப்பைச் சேர்ந்த கவினாடு மேலவட்டம் புரகரநத்தம்பண்ணை ஊராட்சி 1-வது வட்டத்திற்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் கழக ஆதரவாளர் மா. சன்னாசி வெற்றிபெற்றார்.

வாக்குகள் விவரம்:—மா. சன்னாசி 111; காங்கிரசு ஆதரவாளர் சுப்பன் 79.

மப்பேடு

கடம்பத்தூர் தொகுதி மப்பேடு ஊராட்சிமன்ற இடைத் தேர்தலில், மப்பேடு தி. மு. க. செயலாளர் ஆனந்தராசன், 111 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்தார்.

'பீமசேனா' இயக்கம்!

அரசியல் சார்பற்றதாம்

"அக்டோபர் 13-ந் தேதியன்று நாகபுரியில் 'பீமசேனா' என்ற இயக்கம் துவங்கப்பட இருக்கிறது" என்று அந்த இயக்க அமைப்பாளர்களில் ஒருவர், செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த இயக்கம் அரசியல் சார்பற்ற இயக்கமென்றும் பிற்பட்ட மலைசாதியினர், புத்த மார்க்கத்தினர் ஆகியவர்கள் உரிமைகள் பெறுவதற்காக இவ்வியக்கம் போராடுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீ ஜோதி வேஸ்ட் பேப்பர் கம்பெனி
21, அண்ணாபிள்ளை தெரு, சென்னை-1.
தின, வார, மாத வாசித்த பத்திரிகைகளை நியாய விலைக்கு வாங்கி, மலிவான விலைக்கு விற்பனை செய்கிறோம்.

காஞ்சியில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

முத்தமிழில் முப்பால் நிகழ்ச்சி

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, அவர் பிறந்த நகராகிய காஞ்சியில் 30—9—67 அன்று சிறப்பாக நடைபெற்றது.

காலை 11-மணிக்கு ஏழை மக்கள் 500 பேருக்கு உணவு அளிக்கப்பட்டது.

மாலை 6-மணிக்கு சின்ன காஞ்சிபுரம் மூன்றும் திருவிழா மண்டபத்திற்குமுன் அமைந்த மேடையில், 59 ஏழைத் தாய்மார்களுக்கும், 59 பெரியவர்களுக்கும் திருமதி சம்பா—வெங்கடாசலம் பி.எஸ்சி., பி.டி. அவர்கள் மூலம் சேலைகளும், துண்டுகளும் வழங்கப்பட்டன.

திரு. கே. எஸ். கெம்பு தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்களின் தனிச் சிறப்புக் குறித்து தோழர்கள் பூஞ்சோலை, கே. டி. எஸ். மணி, முருகேசன், சரசுவதி—வெங்கடேசன், சம்பா வெங்கடாசலம், சி. வி. இராசகோபால் எம்.எல்.சி., சலகை ப. கண்ணன், சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., சிட்டிபாபு எம்.பி. ஆகியோர் பேசினர்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி பி.ஏ. பி.டி. அவர்கள் வள்ளுவரையும்—அண்ணா அவர்களையும் ஒப்பிட்டு அரியதோர் விரிவுரையாற்றினார்.

இரவு 10-மணிக்கு சலகை ப. கண்ணன் அவர்களின் குறள் நெறிக் கலைக்குழுவின் 'முத்தமிழில் முப்பால்' என்ற இயலும்—இசையும்—நாட்டியமும் கொண்ட கலையரங்கு நடைபெற்றது.

குழலிசைப் பாடல்களுக்கு ஆசிரியர் கண்ணன் விளக்கம் தர—இசையமுதை திரு. டி. பி. பாலகிருஷ்ணன், செல்வி கே. சாந்தா வழங்கிட—இன்பத்துப் பால் பாடல்களுக்கு செல்வி ஆர். கமலா பரதநாட்டியம் ஆடிட—தக்கபக்க மேளவாத்தியங்களுடன் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

தலைமை தாங்கிய திரு. என். கிருஷ்ணன் எம்.ஏ.பி.எல். எம்.எல்.ஏ. அவர்கள் பாராட்டிப் பேசுகையில், திருக்குறள் செய்த வள்ளுவர் இந்த நிகழ்ச்சியைப் பார்த்திருந்தால், 'குறளுக்கு இவ்வளவு அழகான கலை வடிவம் கொடுக்கவும் முடிந்ததா?' என்று வியந்திருப்பார் என்று குறிப்பிட்டார்.

இரவு 12-30 மணிக்கு விழா இனிது முடிந்தது.

தனியார் துறையில் ஆயுதத் தொழிற்சாலை!

குசராத்தில் அமைக்க டில்லி அனுமதியாம்

இந்தியாவில் தனியார் துறையில் அமையும் முதலாவது ஆயுதத் தொழிற்சாலை, குசராத்தில் ஆமதாபாத் அருகே 'விஞ்சோல்' என்னுமிடத்தில் நிறுவப்படும். அது அடுத்த ஆண்டு ஜுலையில் உற்பத்தியில் ஈடுபட ஆரம்பிக்கும்.

மேற்படி தொழிற்சாலைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

அத்தொழிற்சாலை ஒரு 'ஷிப்ட்' அடிப்படையில் முதலாவது ஆண்டில் 5,000 துப்பாக்கிகளை உற்பத்தி செய்யும்; இரண்டு 'ஷிப்ட்' அடிப்படையில் 11,000 துப்பாக்கிகளை உற்பத்தி செய்யும்; மூன்றுவது ஆண்டுக்குப் பிறகு ஆண்டு உற்பத்தி 22,000 ஆக உயரும்.

தொழிற்சாலையைக் கட்டும் வேலை விரைவில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பம்பாயில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

★

ஜோகேசுவரி

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பிலும், ஜோகேசுவரி பகுதிவாழ் தென்னக மக்கள் சார்பிலும், 18—9—67-ல் அண்ணா பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

காலை நிகழ்ச்சியில் என். வகாப், இ. சுடலைமுத்து இனிப்பு வழங்கினர். அதனையடுத்து திருமதி ஆர். ஏ. டி. இராசலட்சுமியின் இசை விருந்து நடைபெற்றது.

மாலை நிகழ்ச்சிக்குத் தோழர் எம். கே. சாமி தலைமை தாங்கினார்; தோழர்கள் தொ. து. அன்புச்செழியன், சி. நா. சிதம்பரன், எஸ். வள்ளிநாயகம், நெல்லை எல். செழியன் உரையாற்றினர்.

தொடர்ந்து கரிவலம்வந்தநல்லூர் குருசாமி குழுவினர் மேளக் கச்சேரியும், பாவூர் இலட்மி—மாரியம்மாள் காவடி கரக ஆட்டமும் நடைபெற்றது.

மன்றச் செயலாளர் உ. அப்துல் ரசாக் நன்றி கூறினார்.

தானா

தானா கிளைக் கழகச் சார்பில் 17—9—67-ல் தோழர் நாதன் தலைமையில் விழா நடைபெற்றது; தோழர்கள் தொ. து. அன்புச்செழியன், சி. நா. சிதம்பரன், மா. இராசகோபால் ஆகியோர் பேசினர். செயலாளர் பட்டு நன்றிகூறினார். அனைவருக்கும் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

செம்பூர்

கிளைக் கழகச் சார்பில் விழா நடைபெற்றது. தோழர்கள் புத்தரசு, ஏ. எல். பெருமாள், இரத்தினசாமி, சுப. குமார், ஜீவரத்தினம், மூர்த்தி ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில் இனிப்பு வழங்கப்பட்டது.

மான்கூர்டு

அண்ணா பிறந்த நாள் விழா 17—9—67-ல் நடைபெற்றது. தோழர்கள் எம். ஆர். துரை, வ, பழனி, பாண்டுரங்கன், ரெங்கசாமி ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் இனிப்பு வழங்கப்பட்டது. இறுதியாக மேளக் கச்சேரி நடைபெற்றது.

பாண்டுப்

அண்ணா மன்றச் சார்பில் விழா நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். கூட்டத்தில் இனிப்பு வழங்கப்பட்டது.

இலட்சுமிசால்

இலட்சுமிசால் எம். ஜி. ஆர். மன்றத்தில் தோழர் எம். முத்தையா தலைமையில் விழா நடைபெற்றது. கழகத் தோழர்கள் பலர் பேசினர். இனிப்பு வழங்கப்பட்டது.

கூட்டுறவு இயக்கம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பினர்கள் பணியாற்ற வேண்டும். அனுபவம் உள்ளவர்கள் அதற்கான ஆற்றலை ஒப்படைக்க வேண்டும்.

இவ்வளவும் நான் கூறுவதற்குக் காரணம், 'விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்' என்பதுதான்.

விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற இயக்கமாக—சமுதாயத்தின் பெரும் நம்பிக்கையைப் பெறுகின்ற சங்கமாக இது செயல்பட வேண்டும்."

இந்தியாவுக்கு விடுதலை வழங்கிய அட்லி மறைந்தார்

உறங்கும்போது அமைதியாக உயிர் பிரிந்தது

இந்தியத் துணைக்கண்டத் தலைவர்கள் இரங்கல்

இலண்டன், அக். 8—

பிரிட்டிஷ் தொழிற் கட்சி முன்னாள் தலைமையமைச்சர் கிளெமண்ட் அட்லி, இலண்டன் வெஸ்ட்மினிஸ்டர் மருத்துவமனையில் இன்று இயற்கையெய்தினார்.

கடந்த ஒரு திங்களாகப் பிணிவாய்ப்பட்டிருந்த அவர், 'உறங்கும் போது அமைதியாக உயிர்நீத்தார்' என்று மருத்துவமனை அறிக்கை ஒன்று கூறுகிறது.

84 வயதுடைய அவர், பிரிட்டிஷ் தலைமையமைச்சராக இருந்த போதுதான் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகள் சுதந்தரம் பெற்றன.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அவர், பிரிட்டனில் மாபெரும் 'சமூகப் புரட்சி'யைக் கொண்டுவந்தார்; இந்த மகத்தான சாதனையை அவர், மிக அமைதியாகச் செய்தார்.

'அமைதியே உருவானவர்' போல் அவர் தோன்றினாலும், இரும்பு உள்ளம் படைத்தவர்; அவருடைய அகராதியில், 'தன்னலம்' என்ற சொல், என்றும் இடம் பெறவில்லை.

உலகப் போரின்போது வின்ஸ்டன் சர்ச்சில் தலைமையமைச்சராகவும், அட்லி துணைத் தலைமையமைச்சராகவும் இருந்தனர். அட்லியிடம் மிகவும் மதிப்பு வைத்திருந்தார் சர்ச்சில்.

குடியரசுத் தலைவர் இரங்கல்

"இந்தியாவுக்கு அரசியல் சுதந்தரம் அளித்த அட்லி பிரபுவின் மாபெரும் இராசதந்திரத்தையும், மதிநுட்பத்தையும் நாங்கள் ஒருபோதும் மறக்க முடியாது"

என்று, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன், இங்கிலாந்து அரசியாருக்கு அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், கி. இராசகோபாலாச்சாரியார், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், [காங்கிரசுத் தலைவர் காமராசர் ஆகியோரும் இரங்கல் தெரிவித்து, அவருடைய சிறப்புமிக்க பணிகளைப் பாராட்டியுள்ளனர்.

அறிஞர் அண்ணா இரங்கல்

சென்னை, அக். 8—

இங்கிலாந்து நாட்டின் முன்னாள் தலைமையமைச்சர் லார்டு அட்லி மரணம் குறித்துத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:—

"அட்லி பிரபுவின் மரணச் செய்தி கேட்டு மிகவும் துயரடைந்தேன். அவரது உடல் நிலையில் அபிவிருத்தி கண்டு வருவதாக வெளிவந்த செய்தி, 'அவர் தேறிவிடுவார்' என்ற நம்பிக்கையை நம்மிடம் ஏற்படுத்தியது; ஆனால், அவரது முடிவு ஏற்பட்டுவிட்டது.

"அவரது புகழ் வாய்ந்த வாழ்க்கை, வரலாற்றின் ஒரு பகுதியாகிவிட்டது.

"இங்கிலாந்து நாட்டின் வரலாற்றில் மட்டுமின்றி, நமது நாட்டின் வரலாற்றிலும்கூட அவரது நிதானம் நிறைந்த இராசதந்திர முத்திரையை அவர் பதிப்பித்திருக்கிறார்.

"மதி நுட்பத்துடனும், பெருந்தன்மையுடனும் அவரால் விடுதலை வழங்கப்பெற்ற இந்த நாடு, அவருடைய நினைவை நீண்டகாலத்துக்கு மதிப்புடன் போற்றிவரும்.

"அவரது சாதனைகள் மகத்தானவை—அவர் எடுத்த முடிவுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

"வின்ஸ்டன் சர்ச்சிலுடன் இணைந்து இவர் இந்த உலகத்தைச் சர்வாதிகாரத்தின் பிடியிலிருந்து காப்பாற்றித் தந்தார்.

"சாகாவரம் பெற்றவர்களின் பட்டியலில் இவரும் தமக்குரிய இடத்தை அடைந்துவிட்டார்."

மலிவு விலையில் உணவு

அமைச்சர் மதியழகன் தொடங்கி வைத்தார்

குன்னூர், அக். 7—

நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் சார்பில் 80 காசுக்கு ஒரு வேளை உணவு வழங்கும் திட்டத்தை உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் துவக்கிவைத்தார்.

அடுத்த கிழமையிலிருந்து நீலகிரி மாவட்டத்தில் உணவுப் பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு அதிக அரிசி கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் இவ்விழாவில் அறிவித்தார்.

வி. வி. கிரிக்கு மாநகராட்சி வரவேற்பு

சென்னை, அக். 7—

இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்களுக்கு, சென்னை மாநகராட்சி, சிறப்புமிக்க வரவேற்பு வழங்கியது.

வரவேற்பு இதழை வெள்ளிப் பேழையில் வைத்து, மேயர் இரா. சம்பந்தம் அளித்தார்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து திரு. வி. வி. கிரி அவர்கள் பேசிய தாவது:—

"சென்னை நகரம் இந்தியாவுக்கு மட்டுமல்லாமல், உலகத்துக்கே சனநாயகத்தின் கருத்துக்களைக் கற்றுக்கொடுத்து வருகிறது.

இந்தச் சென்னை நகரத்தில் ஏழைகள்—பணக்காரர்கள்—நடுத்தர மக்கள்—பல பகுதி மக்கள்—இதுபோல பலதரப்பட்ட மக்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

இங்குள்ளவர்கள் எளிமையாகவும், உழைப்பாளிகளாகவும் இருப்பது சென்னை நகருக்கு பெருமையளிப்பதாகும்.

இப்படிப்பட்ட சிறந்த நகரமான சென்னை நகரின் முன்னேற்றத்துக்கு, நகரசபையில் உள்ள எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், கட்சிப் பாகுபாடு இல்லாமல் உழைக்க வேண்டும்.

நகரம் சுத்தமாக இருப்பதற்கான அவசியத்தை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். வாரத்தில் 2 மணி நேரத்தை இதற்கு ஒதுக்கினால் போதுமானது.

40 ஆண்டுகளாக நான் சென்னை நகரில் இருந்தும், தற்போதைய மேயரால் எனக்கு வரவேற்பு இதழ் வாசித்துக்கொடுக்கப்படுவது, அதிக மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்கும் என் மனைவிக்கும் சென்னை நகரசபை அளித்த பெருமை குறித்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

10--10--67

அரூக்குளி

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: சின்னமுத்து; பேசுவோர்: பி. ஏ. சாமிநாதன் எம்.பி., கே. எம். இராமசாமி எம்.எல்.ஏ., எஸ். எம். பழனியப்பன் எம்.பி., பி.எஸ்., கே. எஸ். ஆனந்தன் பி.காம்., பி.எல்,, ஜி. பி. வெங்கிடு எம்.சி., கே. ஏ, செல்வம்.

திருக்கழுக்குன்றம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: தி. ஆ. சண்முகம்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ.

11--10--67

காசிபாளையம்

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு; தலைவர்: அ சபாபதி; பேசுவோர்: ஓ. பி. இராமன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., இரா. இராமலிங்கம் பி.ஏ.பி.எல்., வி. முத்துசாமி பி.ஏ.பி.எல்., செ. தம்பித்துரை, வி. நாகசுந்தரம் (முருகுபாண்டியனின் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

திட்டாணிமுட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: டி. வி. வரதராசன் பி.ஏ., பேசுவோர்: சி. கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ., அ. நடராசன், தஞ்சைத தம்பி, எஸ். எம். வைத்திலிங்கம், து, கோ. செயராமன், ப. கோவிந்தராசு. கோ. வில்வளவன், எம். யூசுப்தீன், தாழை மு. கருணாநிதி.

செங்கற்பட்டு

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: சி. கே. மதுரைமுத்து; பேசுவோர்; சி.பி. சிற்றரசு எம்.எல்.சி., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., செ.எ. பலராமன், ஏ. ஆர். அன்சர், கோ. ஆலாலசுந்தரம், வ. பசுபதி எம்.சி., சி.எம். தட்சணாமூர்த்தி, தாண்டவராயன். ரங்கநாதன், அ. சுந்தரம்.

ஈரோடு

தி. மு. க. சார்பில் இரவு 7 மணக்கு பெரிய பாவடித்திடலில்; தலைவர்: ஈ. என். முத்து; பேசுவோர்: ப. ச. விசுவநாதன், டாக்டர் சேதுபாஸ்கரன், ஈ. ஆர். குமாரசாமி, கு. குமாரசாமி. (தென்னகப் பல்கலைக் குழு அளிக்கும் குமாரி விசயாவின் 'ஆளுகின்றார் அண்ணா' என்னும் கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

சென்னை 91-வது வட்டம்

குறள் நெறி மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு குளமேடு கெங்கையம்மன் கோயில் தெருவில்; தலைவர்: மு. தாமஸ்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி மணிமொழியார், வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.; முரசொலி மாறன் எம்.ஏ., சைதை சம்பந்தம் எம்.சி., ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., செ. மோகனபிரபு, சி. வி. சிட்டிபாபு, சி.வி.மலையன், கு. இரா. இராசகோபால், எஸ். பழனி, சி. பலராமன், அ. ம. செண்பகராமன்.

குன்னத்தூர் க. அன்பரசு

சுற்றுப்பயணம்

அக். 11: சென்னிமலை; 12, 13: பழனி நகரம்; 14, 15: சென்னை; 16, 17: ஆழியார் பகுதி; 21, 22: வால்பாறை வட்டம்; 26: கொமாரபாளையம்; 27, 28, 29: ஈரோடு வட்டம்; 31; மொடக்குறிச்சி.

திருச்சி வீட்டமைப்புப் பிரிவு

(மாநில வீட்டமைப்புக் கழகத்துக்குட்பட்டது)

ஒப்பந்த அறிவிப்பு எண் 7/67-68

திருச்சி பீச்சான்குளத்தில் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்வதற்கு. வேலையின் பெயரும், ஒப்பந்தக்காரரின் பெயரும் முறையே மேலே குறிப்பிடப்பட்டு, முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப்புள்ளிகள் 25—10—67 மாலை 3 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் வந்து சேரும்படியாக வரவேற்கப்படுகின்றன.

குரூப் I: பிளாக் எண் 7, III & 4-ல் மேல்தளம் (மூன்றடுக்கு) கட்டுதல்

வேலையின் குத்து மதிப்பீடு	ரூ. 2,00,600
பொறுப்புத் தொகை	ரூ. 3,020
ஒப்பந்த நமூனுக்கள் விலை	ரூ. 15-ம் விற்பனை வரியும்

குரூப் II: பிளாக் எண் II, IV & V மூன்றடுக்குக் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுதல்

வேலையின் குத்து மதிப்பீடு	ரூ. 2,39,600
பொறுப்புத் தொகை	ரூ. 3,600
ஒப்பந்த நமூனுக்கள் விலை	ரூ. 15-ம் விற்பனை வரியும்

குரூப் III: பிளாக் எண் I & 5 மூன்றடுக்குக் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுதல்

வேலையின் குத்து மதிப்பீடு	ரூ. 1,59,700
பொறுப்புத் தொகை	ரூ. 2,400
ஒப்பந்த நமூனுக்கள் விலை	ரூ. 10-ம் விற்பனை வரியும்

ஒப்பந்த நமூனுக்களை இந்தப் பிரிவின் டிவிஷனல் அக்கவுண்டெண்டிடமிருந்து 11—10—67 முதல் 24—10—67-க்குள் எல்லா வேலை நாட்களிலும் காலை 10-30 மணி முதல் மாலை 4 மணிக்குள் மேலே குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு வேலைக்குமான விலையைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் 25—10—67 மாலை 3-15 மணிக்கு உடைத்துப் பார்க்கப்படும்.

சர்க்யூட் ஹவுஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி - 1.

ஆர். வெங்கடாச்சார்
நிர்வாகப் பொறியர் & நிர்வாக அதிகாரி

அறிஞர் அண்ணா சுற்றுப்பயணம்

அக். 11 காலை 10-15 மணி: தஞ்சாவூர்; மாலை 3-30 மணி: கும்பகோணம்; மாலை 5-30 மணி: திருவாரூர்.

அக். 12 காலை 7-30 மணி: காஞ்சிபுரம்; அய்யம்பேட்டை கழக உயர்நிலைப் பள்ளி திறப்புவிழா நிகழ்ச்சி.

அக். 13 காலை: காஞ்சிபுரம்—வேளாண்மைக் கருத்தரங்கு; மாலை: காஞ்சிபுரம் சீரணித் துவக்கவிழா; மாலை 6-30 மணி: செவிலிமேடு—வீட்டு மனைகளுக்கான பட்டா வழங்குதல்.

அமைச்சர்

மா. முத்துச்சாமி

சுற்றுப்பயணம்

அக். 10 காலை 10மணி: நாமக்கல்.

அக். 11 மாலை 2-30 மணி: கடலூர்—தெ. ஆ. மாவட்ட வட்டார முன்னேற்ற அதிகாரிகள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாநாடு.

அக். 12 காலை: சீர்காழி பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை: செம்பனார் கோயில் தொகுதி நிகழ்ச்சிகள்.

அக். 13 காலை 11 மணி: தஞ்சாவூர்; மாலை 2-30 மணி: தஞ்சை மாவட்ட வட்டார முன்னேற்ற அதிகாரிகள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாநாடு.

குழுக் கூட்டம்

திருச்சி வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், 11—10—67 மாலை 5 மணிக்கு, திருச்சி-நாதன் கம்பெனி மாடியில் நடைபெறும்.

ஜனசங்க அமைச்சர்கள் கூடுகின்றனர்!

லக்னோ, அக். 9—

ஜனசங்க அமைச்சர்களின் மாநாடு ஒன்று அக்டோபர் 28, 29, 30-ந் தேதிகளில் போபாலில் நடக்குமென்று நம்பகமாகத்தெரிகிறது.

பல்வேறு மாநிலங்களிலுள்ள ஜனசங்க அமைச்சர்களின் சாதனைகள் அங்கு பரிசீலிக்கப்பட்டுப் பொருளாதாரத் திட்டங்கள் வகுக்கப்படும்.

பீகார், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், அரியானா,பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலுள்ள ஜனசங்க அமைச்சர்களும், டெல்லி மாநகராட்சி உறுப்பினர்களும் இம்மாநாட்டில் கலந்துகொள்வர். ஜனசங்கச் சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொள்வர்.

மேயரிடம் ஜேப்படி!

திருப்பதி, அக். 8—

ஐதராபாத் மாநகராட்சி மேயர், திருப்பதி ஏழுமலையான் சன்னதியில், 'ஜேப்படி'க்கு ஆளானார்!

தரிசன ஏற்பாடுகளையும், ஏனைய ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டிருந்த மேயர் கொண்டா ரெட்டி, தமது சட்டைப் பையிலிருந்து 200 ரூபாயைக் கோட்டைவிட்டார்! ஆனால், அவர் பக்கத்திலிருந்த தேவஸ்தான அறங்காவலர் குழுவைச் சேர்ந்த ஒருவர், ஜேப்படி செய்தவனை, கையும் களவுமாக பிடித்து விட்டார்!

சென்னை 9-வது வட்ட அண்ணா நற்பணி மன்றம்

சென்னை 9-வது வட்ட அண்ணா நற்பணி மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல், 24—9—67 அன்று வட்டச் செயலாளர் வி. எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வருமாறு:—

தலைவர்: இரா. கணபதி; செயலாளர்: என். எம். சாமி; துணைச் செயலாளர்: முருகேசன்; பொருளாளர்: குஞ்சு பேர்; 19 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

அண்ணா பிறந்த நாள் விழா

சென்னை 92-வது வட்டம், ஒற்றைவாடைத் தெரு, ராம் தியேட்டர் எதிரில் 10—10—67 காலை 10 மணிக்கு சா. கணேசன் எம்.சி. தலைமையில் அண்ணா பிறந்த நாள் விழா நடைபெறும்; அமைச்சர் சாதிக்பாட்சா கொடியேற்றிவைப்பார்; அறிஞர் அண்ணா படத்தை மேயர் இரா. சம்பந்தம் திறந்துவைப்பார்; காஞ்சி மணிமொழியார் இனிப்பு வழங்குவார்; முரசொலி மாறன் எம்.ஏ. எம். குமார், சோ. கி. மூர்த்தி, செ. கண்ணப்பன், க. துரை ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு. அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு. சென்னை-1), [illegible]